# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - அறுக்கும்வினை
## எம்பெருமான் பால் தூது போக விட்ட பறவைகள் வரக் காணாமையாலே தலைவி தலைவனது நகரான திருநாவாயில் செல்ல நினைந்தமை கூறும் முகத்தால் ஆழ்வார் தமது ப்ராப்யத்வரையைத் தெரிவித்தல்

** அறுக்கும் வினை ஆயின * ஆகத்து அவனை *
நிறுத்தும் மனத்து ஒன்றிய * சிந்தையினார்க்கு **
வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
குறுக்கும் வகை உண்டு கொலோ? * கொடியேற்கே 1

கொடி ஏர் இடைக் * கோகனகத்தவள் கேள்வன் *
வடி வேல் தடங் கண் * மடப் பின்னை மணாளன் **
நெடியான் உறை சோலைகள் சூழ் * திருநாவாய் *
அடியேன் அணுகப் பெறு நாள் * எவை கொலொ? 2

எவை கொல் அணுகப் பெறு நாள்? * என்று எப்போதும் *
கவையில் மனம் இன்றிக் * கண்ணீர்கள் கலுழ்வன் **
நவையில் திருநாரணன் சேர் * திருநாவாய் *
அவையுள் புகல் ஆவதோர் * நாள் அறியேனே 3

நாளேல் அறியேன் * எனக்கு உள்ளன * நானும்
மீளா அடிமைப் * பணி செய்யப் புகுந்தேன் **
நீளார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
வாளேய் தடங் கண் * மடப் பின்னை மணாளா! 4

மணாளன் மலர் மங்கைக்கும் * மண் மடந்தைக்கும் *
கண்ணாளன் * உலகத்து உயிர் தேவர்கட்கு எல்லாம் **
விண்ணாளன் விரும்பி உறையும் * திருநாவாய் *
கண் ஆரக் களிக்கின்றது * இங்கு என்று கொல் கண்டே? 5

கண்டே களிக்கின்றது * இங்கு என்று கொல்? கண்கள் *
தொண்டே உனக்காய் ஒழிந்தேன் * துரிசு இன்றி **
வண்டார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
கொண்டே உறைகின்ற * எம் கோவலர் கோவே! 6

கோ ஆகிய மாவலியை * நிலம் கொண்டாய்! *
தேவாசுரம் செற்றவனே! * திருமாலே! **
நாவாய் உறைகின்ற * என் நாரண நம்பீ! *
ஆவா! அடியான் * இவன் என்று அருளாயே 7

அருளாது ஒழிவாய் * அருள் செய்து * அடியேனைப்
பொருள் ஆக்கி * உன் பொன் அடிக் கீழ்ப் புக வைப்பாய் **
மருளே இன்றி * உன்னை என் நெஞ்சத்து இருத்தும் *
தெருளே தரு * தென் திருநாவாய் என் தேவே! 8

தேவர் முனிவர்க்கு என்றும் * காண்டற்கு அரியன் *
மூவர் முதல்வன் * ஒரு மூவுலகு ஆளி **
தேவன் விரும்பி உறையும் * திருநாவாய் *
யாவர் அணுகப் பெறுவார் * இனி அந்தோ! 9

அந்தோ! அணுகப் பெறு நாள் * என்று எப்போதும் *
சிந்தை கலங்கித் * திருமால்! என்று அழைப்பன் **
கொந்தார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
வந்தே உறைகின்ற * எம் மா மணி வண்ணா! 10

** வண்ணம் மணி மாட * நல் நாவாய் உள்ளானை *
திண் அம்மதிள் * தென் குருகூர்ச் சடகோபன் **
பண்ணார் தமிழ் * ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
மண்ணாண்டு * மணம் கமழ்வர் மல்லிகையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---